# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/47 - 2016 නොවැම්බර් මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.11.10

*1992/47 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பிலக்கம்: EMDS/LND/ACQ/02/12.
காணி அமைச்சின் குறிப்பிலக்கம்: 4-3/9/2013/WS/489.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், எம்பிலிபிடிய பிரதேச செயலாளர் பிரிவில், தியபொடகம் பத்துவ சிறு பிரிவில், பனாமுறே கிராமத்திலமைந்த, நில அளவை நாயகத்தினால் 2016.06.23 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட கிராம வரைபடத்தில் இலக்கம் 753, மேலதிக இலக்கம் 43 மற்றும் படிவம் 43 இன் வரைபடத்தில் காணித் துண்டிலக்கம் 1075 எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0212 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய "வெஹேரகாவ மூகலான" என்னும் காணியில் கீழ்க்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு.

**துண்டு இலக்கம் 1075; காணியின் பெயர்: வெஹேரகாவ மூகலான; உரிமை கோருபவர்: திரு. ஆர். கே. ஜயலத், வே அத்துர, பனாமுறே; விஸ்தீரணம்: 0.0212 ஹெக்டயார்**

வடக்கு: காணித்துண்டிலக்கம் 402; கிழக்கு: காணித்துண்டிலக்கம் 402, 1070 மற்றும் 1066; தெற்கு: காணித்துண்டிலக்கம் 402, 1070, 1066 மற்றும் 1065; மேற்கு: காணித்துண்டிலக்கம் 1065 மற்றும் 402.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு எம்பிலிபிடிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வசந்த குணரத்ன,
பிரதேச செயலாளர்,
எம்பிலிபிடிய.

பிரதேச செயலகம்,
எம்பிலிபிடிய,
2016, நவெம்பர் 07.

11-1138

---

திருத்தம்

**காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வ/18/56/2001/IV.

2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிய 1645/12 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கம். 3716 இல் துண்டு இல. 30 இன் துண்டு இல. 117, 118, 119, 120, 121 மற்றும் 122 என கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தருகிறேன்.

**துண்டு இல. 117**

காணியின் பெயர் : குவன் அமுதா வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம், சுமார் 15 வருட வயதுள்ள இளநீர் மரம் 1 மற்றும் பலாக்காய் மரம் 1 காணப்படுகின்றது; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: பீ.ஏ.சுமித் ஆனந்த, மெத்தெகந்தவத்த, பலங்கொடை ; விஸ்தீரணம் : 0.0038 ஹெக்டயார்.

**துண்டு இல. 118**

காணியின் பெயர் : குவன் அமுதா வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம், சுமார் 10 வருட வயதுள்ள மஹோகனீ மரம் 1 காணப்படுகின்றது; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: பீ.ஏ.எஸ்.எஸ்.முனசிங்ஹ, இல. 86/3, கல்உடுபிட வீதி, ராகம ; விஸ்தீரணம் : 0.0067 ஹெக்டயார்.

**துண்டு இல. 119**

காணியின் பெயர் : குவன் அமுதா வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: பீ. ஏ. டீ. டீ. மல்காந்தி முணசிங்ஹ, இல. 111, சன்ரயிஸ் மாவத்தை, மத்துமகல, ராகம; விஸ்தீரணம் : 0.0126 ஹெக்டயார்.

**துண்டு இல. 120**

காணியின் பெயர் : குவன் அமுதா வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம் 1, சீமேந்தினால் கட்டப்பட்ட கிணறு மற்றும் மலசலகூடம் காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜீ. ஏ. எல். எஸ். நயனா முனசிங்க, இல. 05, தர்மதாச மாவத்தை, எலபிடிவல, ராகம ; விஸ்தீரணம் : 0.0038 ஹெக்டயார்.

**துண்டு இல. 121**

காணியின் பெயர் : குவன் அமுதா வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம் மற்றும் நிரந்தரக் கட்டிடம் 1 காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: பீ. ஏ. லக்ஷ்மன் அதுல, இல. 113, சன்ரயிஸ் மாவத்தை, மத்துமகல, ராகம ; விஸ்தீரணம் : 0.0126 ஹெக்டயார்.

**துண்டு இல. 122**

காணியின் பெயர் : குவன் அமுதா வத்த ; விபரம் : வீட்டுத்தோட்டம் மற்றும் நிரந்தரக் கட்டிடம் 1 காணப்படுகின்றது ; உரிமை கோருபவர் : அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: எச். கே. ஜகத் சமிந்த, இல. 113, சன்ரயிஸ் மாவத்தை, மத்துமகல, ராகம ; விஸ்தீரணம் : 0.0126 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக துண்டு இல. 117 தொடக்கம் 122 வரையான காணிக்கு 2016ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டபிள்யூ. ஜீ. பிரேமலால்,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2016, நவெம்பர் 02.

11- 1140

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இலக்கம்: 4-3/7/2016/HW/98.
எனது இல.: மீரி/DL/ L/3/ 2016/5.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2016.10.05 ஆந் திகதிய 1987/24 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிஷேட) வர்த்தமானியின் உரிமை கோரல் பரிசீலனை 2016.10.17 ஆந் திகதி மு. ப. 09.30 மணியென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அது 2016.11.17 ஆந் திகதி மு. ப. 09.00 மணியெனத் திருத்தப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

வை. ஐ. எம். சில்வா,
பிரதேச செயலாளர்,
மீரிகம.

பிரதேச செயலகம்,
மீரிகம,
2016, ஒற்றோபர் 26.

11 -1141